4. அரசினர் தீர்மானம்

பேரவை விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 29-ஆம் தேதி கேள்வி நேரத்தை ஒத்திவைத்து அந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையை வைத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்று உள்ள சட்ட மன்றப் பேரவை விதி 32-ஐ, 29—3—1993 அன்று தளர்த்தி, அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் இல்லை என்க (இல்லை)
மறுப்போரே இல்லை,
தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 29—3—1993 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.31 மணியளவில் ஒத்திவைக்கப்பெற்றது.

15. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

ஏதுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

71. கோரிக்கை எண் 18—மருத்துவம் மற்றும் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் குறித்த கொள்கைக் குறிப்புகள், 1993, 94 (தமிழ், ஆங்கிலம்).

72. கோரிக்கை எண் 19-ன் கீழ் சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாடு மீதான கொள்கை விளக்கக் குறிப்பு 1993—94 (தமிழ் ஆங்கிலம்)

1993 மார்ச் 23]

73. பொதுச் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை பற்றிய சாதனை அறிக்கை, 1992-93 (ஆங்கிலம்).

74. புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத்திட்டம் பற்றிய சிறு புத்தகம் (ஆங்கிலம்).

75. கோரிக்கை எண் 32—வீட்டுவசதி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

76. கோரிக்கை எண். 33—நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

77. 1993-94-ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

78. 1993-94-ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

79. 1992-93-ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

80. 1992-93-ஆம் ஆண்டின் இறுதி துணை மதிப்பீடுகள் குறித்து நிதி அமைச்சர், மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

81. 1992-93-ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

82. மதிப்பீட்டுக் குழுவின் எட்டாவது அறிக்கை, 1992-93.

83. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூறாவது அறிக்கை 1992-93.

84. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஒன்றாவது அறிக்கை, 1992-93.

85. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று இரண்டாவது அறிக்கை, 1992-93.

86. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை, 1992-93.

87. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று நான்காவது அறிக்கை, 1992-93.

88. உடுக்குறியிடாத வினாக்கள், விடைகள் (பதினொன்றாவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 100 வரை).

89. கீழ்க்காணப் பெறும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் 27—8—1969 ஆம் தேதியன்று ஏற்புளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப்பெற்றது.)

31—3—1992 அன்று உள்ளவாறு அளித்தவர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
2. திருமதி அ. தி. சரஸ்வதி
3. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்
4. திரு. எம். பெரியவீரன்
5. திருமதி வி. ஜி. மணிமேகலை
6. திரு. கே. ஆர். ராஜு
7. திரு. எச். எம். ராஜு

இணைப்பு I.

[387 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாட்டில் வீட்டு வசதி 1993-94,

மானியக் கோரிக்கை எண். 32,—வீட்டு வசதி.

1. வீட்டு வசதிக் கொள்கை :

1.1. வீட்டு வசதி என்பது ஓர் அடிப்படைத் தேவையும் சமூக பொருளாதார வளர்ச்சியில் ஒரு முக்கிய அம்சமும் ஆகும். வீடு வசிப்பதற்கான இன்றியமையாத இடமாக இருந்தபோதிலும் குடும்பத்திற்கான பல முக்கியமான தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும் உள்ளது. இல்லம் என்பது வாழ்விடமாக அமைவதோடு மட்டுமல்லாது இதில் முதலீடு செய்வது என்பது பயன் தரத்தக்க ஒன்றும் ஆகும். இதனால், பொருளாதார நடவடிக்கைகள் மேம்படுவதோடு, தேசிய கொள்கையின் கீழ்க்காணும் இலக்குகள் பலவற்றை எய்தவும் அடிப்படையாக அமைகிறது. அவையாவன:—

(அ) வாழ்வதற்கு இல்லத்தை ஏற்படுத்திக் கொடுத்தல், அதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS